## 14. இயற்க்கைக்குமாறான / விபத்து மரண வழக்குகள்

## Investigation of UN – Natural Death

### Section 174 Cr.p.c : (PSO. 583)

(1) ஒருவர் தற்கொலை செய்துக் கொண்டுள்ளார் அல்லது மற்றொருவராலோ, விலங்கினாலோ, இயந்திரத்தாலோ, ஒரு விபத்தாலோ கொல்லப்பட்டிருக்கிறார் அல்லது வேறொருவர் குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறார் என்னும் நியாயமான சந்தேகத்தை எழுப்புகிற சூழ்நிலைகளில், அவர் இறந்திருக்கிறார் என்பதாக காவல் நிலைய பொறுப்பலுவலருக்கோ, மாநில அரசால் அதற்கென சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறொரு காவல் அலுவலருக்கோ, தகவல் கிடைக்கும்போது, அவர் அது பற்றி தகவலைப் பிரேத விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ளவரும், மிகவும் அருகாமையிலுள்ளவருமான நிர்வாகத்துறை நடுவருக்கு உடனடியாக தெரிவித்தல் வேண்டும், மற்றும் மாநில அரசால் விதிக்கப்பட்ட விதி ஏதொன்றின் மூலமாகவோ மாவட்ட அல்லது உட்கோட்ட நடுவரின் பொது அல்லது சிறப்பு உத்தரவு ஏதொன்றின் மூலமாகவோ வேறுவிதமாக உத்திரவிடப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு மரணம் அடைந்தவரின் உடல் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, அங்கே, அண்டையில் குடியிருப்பவர்களில் பாதிக்கத்தக்க இருவர் அல்லது மேற்பட்டவர்களின் முன்னிலையில் புலனாய்வை செய்து அந்த உடலின் மீது காணப்படும் காயங்கள் எலும்பு முறிவுகள், கன்றிப்போன காயங்கள் மற்றும் வேறு காயக்குறிகள் (ஏதேனுமிருப்பின்) அத்தகைய காயக்குறிகள் உண்டாக்கப்பட்டதாக தோன்றுகின்றன என்பதை உரைத்தும்,

மரணமுண்டானதற்கத் தோன்றுகின்ற காரணத்தை தெரிவிக்கும் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும். (Inquest Report)

(2) அந்த அறிக்கை, அத்தகைய காவல் அலுவலராலும், வேறு ஆட்களாலும் அல்லது அவர்களின் எத்தனை பேர்கள் அதற்கு உடன்படுகிறார்களோ அத்தனை பேர்களாலும் கையொப்பம் இடப்பட வேண்டும் மற்றும் அது மாவட்ட நடுவருக்கும் அல்லது உட்கோட்ட நடுவருக்கு உடனடியாக அனுப்பி வைக்கபட வேண்டும்.

(3) கீழ்காணும் நேர்வுகளில்

(i) திருமணம் நிகழ்ந்த 7 வருடங்களுக்குள் பெண் தற்கொலை செய்து கொண்டால் அல்லது

(ii) திருமணம் புரிந்த 7 வருடங்களக்குள் பெண்ணின் மரணமானது வேறு நபர் குற்றம் செய்திருப்பார் என சந்தேகச் சூழ்நிலைகள் இருப்பின் அல்லது

(iii) திருமணம் புரிந்து 7 வருடங்களுக்குள் மரணம் அடைந்ததின் பேரில் பெண்ணின் உறவினர் எவராவது ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது

(iv) மரணத்திற்கான காரணத்தில் சந்தேகமிருப்பின் அல்லது

(v) வேறு ஏதேனும் காரணங்களுக்காக காவல் அலுவலர் தேவையெனக் கருத்தும் நேர்வில்

மாநில அரசினால் அது தொடர்பாக குறிப்பிடப்படும் விதிகளுக்கிணங்க, இறந்தவரின் உடலை ஆய்வு செய்திட அந்நபரின் உடலை அருகிலுள்ள அல்லது மாநில அரசினால் நியமிக்கப்படும். தகுதிப்பெற்ற மருத்துவருக்கு அனுப்பி விடலாம்.

மருத்துவமணைக்கு எடுத்துச் செல்ல தொலைவும் வானிலையும் இடங்கொடுக்காமல் அது அழுகிடக் கூடிய அபாயம் இருப்பின்

(4) பின்வரும் நடுவர்கள் பிரேத விசாரணையை நடத்த அதிகாரமளிக்கப்படுகின்றனர். அதாவது மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவரும் மாநில அரசால் அல்லது மாவட்ட நடுவரால் இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்படட வேண்டுவதை நிர்வாகத்துறை நடுவரும்.

**இயற்கைக்கு மாறான மரணம் - பிரேத விசாரணை**

ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் அல்லது மற்றொருவராலோ, விலங்கினாலோ, இயந்திரத்தாலோ, ஒரு விபத்தாலோ இறந்திருக்கிறார் என்ற நியாயமான சந்தேகம் எழுகின்ற சூழ்நிலையில் கிடைக்கும் தகவலின் பெயரில் காவல் அலுவலர் வழக்கு பதிவு செய்து மேற்கொள்ளும் விசாரனை பிரேத விசாரணை எனப்படும்.

i. வழக்குப் பதிவு செய்தவுடன் சாதாரண வழக்குகளில் இரண்டாம் வகுப்பு நிர்வாகத்துறை நடுவருக்கும், வருவாய் வட்டாட்சியர் (Thasildar), திருமணமாக ஒரு பெண் 7 வருடங்களுக்குள் மரணமடைந்தால் முதல் வகுப்பு நிர்வாகத்துறை நடுவர் RDD (வருவாய் கோட்டாட்சியர்) அவர்களுக்கும் முதல் தகவல் அறிக்கையை அனுப்ப வேண்டும்.

ii. புலன் விசாரனையின் பேரில் சம்பவமிடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்று மகஜர், புகைப்படம் தயார் செய்ய வேண்டும். தேவைப்படும் வழக்குகளில் வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும்.

iii. அடையாளம் தெரியாத பிரேதமாக இருப்பின் பிரேதப் பரிசோதனைக்கு முன்பே அவரது கைரேரகைள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iv. பிரேதம் கிடைக்கும் இடம், பிரேதம் ஆகியவை துல்லியமாக நன்கு தெரியும்படி புகைப்படும் எடுக்கப்படல் வேண்டும்.

v. மேற்படி புகைப்படத்தை உடனே காலத்தாமதம் செய்யாமல் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி, சென்னையில் உள்ள தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்த வேண்டும்.

vi. துண்டுப் பிரசுங்கள் தயார் செய்து விநியோகித்தும், தண்டோரா மூலமும் விளம்பர படுத்த வேண்டும்.

vii. தமிழ்நாடு குற்ற நுண்ணறிவு இதழில் (Tamilnadu Criminal Intelligence Gazette) ல் வெளியிட மாவட்ட குற்றப் பதிவேடு கூடம் மூலம் வேண்டுகோள் கடிதம் மற்றும் புகைப்படம், முதல் தகவல் அறிக்கை, துண்டுப் பிரசுரம் (Discriptive particulars) ஆகியவைகள் இரண்டு பிரதிகள் இணைத்து அனுப்ப வேண்டும்.

viii. காணாமல் போனவர்கள் பற்றிய படிவம் (TALASH) படிவம் தயாரித்து DCRB க்கு அனுப்ப வேண்டும்.

ix. பிரேத விசாரணை (Inquest) – 174 CRPC.

x. சம்பவ இடம் சென்று பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை (படிவம் 87) சார்வு செய்து பிரேதத்தின் மீது பிரேத விசாரணை (Inquest) மேற்கொள்ள வேண்டும். மேற்படி பஞ்சாயத்தார் 2 அல்லது அதற்கு மேற்பட்டவராகவும், இறந்தவரின் உறவினர் அல்லாதவராகவும், பலதரப்பட்ட இனத்தை சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

xi. பிரேத விசாரணை அறிக்கையானது 26 காலங்களை உள்ளடக்கியதாகும் (படிவம் 85) காலம் 19 முதல் 25 வரை இருப்புபாதை காவலருக்குரியது.

xii. சாட்சிகளை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விசாரித்து வாக்கு மூலங்கள் பதிவு செய்ய வேண்டும்.

xiii. இறப்பிற்க்கான வெளிப்படையான காரணம் (விசாரணை அதிகாரியின் முடிவு) (காலம் 9) மற்றும் பஞ்சாயத்தார் குழுவின் இறப்பிற்க்கான

அபிப்ராயம் (காலம் 15) ஆகியவை ஒன்றையொன்று ஒத்திருக்க வேண்டும்.

xiv. காலம் 16ல் பஞ்சாயத்தார்கள் கையொப்பம் பெற வேண்டும்.

xv. காலம் 17ல் புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்ய வேண்டும்.

xvi. காலம் 26ல் பிரேத விசாரணை துவங்கிய, முடிவுற்ற தேதி, நேரம், இடம் ஆகியவைகளை குறிப்பிட வேண்டும்.

xvii. கடைசியாக புலன் விசாரணை அலுவலர் கையொப்பம் செய்ய வேண்டும்.

| செய்யவேண்டியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| 1. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தை மருத்துவமனையில் அது அழுகிப் போகாதவாறு ஏற்பாடுகள் செய்து பாதுகாப்பாக வைக்க வேண்டும் | 1. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தை உடனே அடக்கம் செய்துவிடல் |
| 2. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தின் மீது காணப்படும் ஒவ்வொரு பொருளையும் கைப்பற்றி கவனமாக பாதுகாப்பாக வைத்திடல் வேண்டும். | 2. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தின் மீது காணப்படும் பொருட்கள் குறித்து அசட்டைடாகவோ, கவனக் குறைவாகவோ இருத்தல். |
| 3. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது கை ரேகைகளை பதிவு செய்து தனி விரல்ரேகை கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். | 3. இறந்தவர் அடையாளம் தெரியாதவராக இருந்தால் அவரது கை ரேகைகள் பதிவு செய்வதில் மெத்தனமாகவோ, ஏனோதானோவென்று இருந்திடக் கூடாது. |
| 4. இறந்தவர் அடையாளம் | 4. இறந்தவர் அடையாளம் |

| | |
|---|---|
| தெரியாதவராக இருந்தால் அவரது பிரேதத்தைச் சொந்தம் கொண்டாடி வரும் நபர்கள் அல்லது உறவினர்கள் கூறும் கூற்றுகளை நன்கு விசாரித்தப்பிறகே அந்த பிரேதம் குறித்து ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும். | தெரியாதவராக இருந்தால் அவரது இறப்பு குறித்து சரியாக தீவிரமான விசாரணை செய்யாமல், பெயரளவில் விசாரணை செய்து அவசரப்பட்டு முடிவு எடுத்தல். |

## பிரேத பரிசோதனைக்காக பிரேத்தை ஒப்புவிக்கும் முறை

## (Handing over dead bodies for post mortem examination)

i. பிரேத விசாரணை (Inquest) முடிந்தவுடன் பிரேதத்தின் நிலையினை படிவம் 86ல் பதிவு செய்து, மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு காவலர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்ய எடுத்து செல்லும் காவலரின் கையொப்பம் பெற்று அவரிடம் பிரேதத்தையும் அதன் உடமைகளையும் கடவுச்சீட்டு மூலம் ஒப்புவிக்க வேண்டும். மேற்படி வழிக்காவலர் பிரேதத்துடன்தான் செல்ல வேண்டும் (PSO 589)

ii. பிரேதவழி காவலர் கடவுச்சீட்டுன் அருகாமையில் உள்ள அரசு மருத்துவ மனையில் அலுவலிலுள்ள மருத்துவ அலுவலர் முன்பு பிரேத்தை ஆஜர் படுத்த வேண்டும்.

iii. பிரேதத்தை காலம் 14ல் ல்ண்டுள்ளபடி அடக்கம் செய்ய அதன் உறவினர்கள் வசம் ஒப்புவித்து ஒப்புகை பெறவேண்டும். அனாதைப் பிரேதமாக இருப்பின் பிரேத பரிசோதனைக்கு பின் அருகாமையிலுள்ள மயானத்தில் கிராம நிர்வாக அலுவலர் / உதவியாளர் முன்னிலையில் நல்லடக்கம் செய்து அதற்கு மயான ரசீது / கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் பெற வேண்டும்.

iv. திருமணமாகி 7 வருடங்களுக்குள் ஏற்படும் மரண வழக்குகளும் வரதட்சணை கொடுமை வழக்குகளிலும் பிரேதத்தை, பெற்றோர்களிடமும், மற்ற சமயங்களில் கணவரிடமும் ஒப்புவிக்க வேண்டும்.

v. புலன் விசாரணை அலுவலர் அந்த சொத்தை தனி அறிக்கையுடன் படிவம் 91ன் மூலம் நீதிமன்றம் / நிர்வாகத்துறை நடுவர்அரர்களுக்கு அனுப்பியும் அந்த கடவுச் சீட்டை வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடும் வழக்கு கோப்பில் வைக்க வேண்டும்.

vi. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் பொறுப்பிலுள்ள காவல் அலுவலர் மருத்துவ அலுவலரால் பரிசோதிக்கப்பட்ட உடல்தான் வழிக்காவல் செய்து எடுத்து வரப்பட்ட உடல் என்று சாட்சி சொல்லக்கூடியவராயிருக்க வேண்டும். பிரேதப்பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட ஓர் உடலை இறந்தவரின் நண்பர்களாவது உறவினர்களாவது விரும்பினால் அவர்களிடம் ஒப்புவித்து அதனை அடக்கம் செயவதற்கு காவலர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

| **செய்யவேண்டியவை** | **செய்யக்கூடாதவை** |
|---|---|
| 1. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்துடன்தான் அதனை வழிக்காவல் செய்யும் காவலர் செல்ல வேண்டும் என்பதை தெளிவாகக் கூறி அனுப்ப வேண்டும். | 1. பிரேதப்பரிசோதனைக்காக அனுப்பப்படும் ஒரு பிணத்தின் பொறுப்பிலுள்ள காவல் அலுவலர் பிணத்தை யார் பொறுப்பிலாவது விட்டுவிட்டு அவர் தனியாக செல்லுதல். |

**செயற்கையான இறப்புகள்**

செயற்கையான இறப்புகள் என்பன விபத்து, தற்கொலை அல்லது கொலையின் விளைவாக அமையலாம் காரணம் தெளிவாகத் தெரியவில்லை

என்றால் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு பிரிவு 174 இன் கீழ் வழக்கைப் பதிவு செய்து புலனாய்வு வேண்டும். புலனாய்வின் பொழுது நேர்மையில்லாத நடவடிக்கை வெளிப்பட்டால் முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் முறையான கொலை வழக்காக அமைத்துக் கொண்டு இந்திய தண்டனை விதித்தொகுப்பு 302இன் பிரிவாக முன்னைய பிரிவை மாற்றிக்கொள்ள வேண்டும். அது தற்கொலையாக அல்லது தெளிவான விபத்தாக அமைந்தால் அதனை அவ்வாறே அமைத்துக் கொள்ளலாம்.

**குற்றம் நிகழ்ந்த இடத்தைக் காத்தல்**

நிகழ்ச்சி நடந்த இடத்துக்கு வந்தவுடன் புலனாய்வு அலுவலர் நிகழிடத்தைப் பாதுகாப்பு செய்து, தொடர்பற்றவர்கள் அதனை என்னவென்று அறிய ஆர்வமுள்ள பார்வையாளர்கள் அவ்விடத்தின் மேல் நடந்து செல்லாதபடி ஒரு காவலரை நியமிக்க வேண்டும்.

**நிகழிடத்தை சோதனை செய்தல்**

(7 இ.சா.ச) புலனாய்வு அலுவலர் அடுத்து நிகழிடத்தைக் கூர்ந்து நோக்கி நிழ்ற்படம் எடுப்பதோடு வழக்கோடு தொடர்புடைய எல்லாவற்யையும் அதன் அமைப்புக்கோடு நோக்குதல் வேண்டும். நிழற்படம் தேவையான எல்லாக் கோணங்களின் அளவிலும் தூர அளவிலும் அணுகிய முறையின் அளவிலும் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மேலும் அளவிடும் முறையில் நிகழ்ந்த இடத்தின் விரிவான வரைபடம் ஒன்றை தயார் செய்ய வேண்டும்.

**பிரேத விசாரணை**

பிரேத விசாரணை என்ற தொடர் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (நீதிமன்றம்) பிரிவு 174ல் விளக்கப்படாது, குறிப்பாக பிரேத்தின் மேல் செய்யப்படும் விசாரணையையே சுட்டுகிறது. எனினும் இத்தகையை விசாரணைக்கு இத்தொடராகிய பிரேத விசாரணை என்பது குறிக்கப்டுவதால் அதனையே இங்கு பயன்படுத்திக் கொள்ளலாம். பிரேத விசாரணையின் அடிப்படை நோக்கம்

இறப்புக்குரிய காரணத்தை ஆய்வதோடு அதனையொட்டி இயன்ற அளவில் எழுத்து மூலமான முடிவை பஞ்சாயத்தார்கள் ஒப்பத்தோடு வாங்கவதாகும். இறப்பிக்குரிய காரணம் தெளிவாக இல்லையெனில் அது அவ்வாறு குறிக்கப்பட வேண்டும். ஆங்கிலேய பிரேத ஆராய்ச்சியாளர் தன்னுடைய பிரேத விசாரனையை வல்லுநரிடமிருந்து தகவல் வரும் வரையில் அல்லது காவல் துறையினரின் தொடர் விசாரணை மூலம் தகவல் வரும் வரை ஒத்திவைத்தல் என்ற முறை இற்தியாவில் நிலவக் காணோம்.

**பிண ஆய்வு**

இறப்பின் காரணத்தையொட்டி சிறிது ஐயம் எழுந்தாலும் பிணம் விரைவில் அருகிலுள்ள மருத்துவமனைக்கு பிண ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒரு காவலர் அனுமதி சான்றிதழோடும் பிணத்தோடும் இறந்தவரின் சில உறவினர்களோடும் செல்லுதல் வேண்டும். இக்காவலர் பின்னர் தேவையெனில் அப்பிணம் தனது பொறுப்பில் பிரேத விசாரணை இடத்திலிருந்து பிண ஆய்வுக்கு கொடுக்கப்டும் வரையில் இருந்தவரென்று உறுதி கூறும் சான்றுரைஞராக அமைவார். இது, எதிர் வழக்காடுபவர் பின்னர் பிணம் செல்லும் வழியில் குறுக்கீடு ஏற்பட்டது அல்லது பிணம் மாற்றப்பட்டதெனக் கூறும் கருத்துரைகளை மறுக்க உதவுவதாகும்.

**காணமுடியாமல் போன பிணம்**

பிணம் கொண்டு வரப்படாமலேயே கொலையை உறுதி செய்வது கடினமென்றாலும் பல வழக்குகளில் பிணம் கண்டுபிடிக்கப்படாமலேயே தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான பல வழக்குகளில் ஒன்று சென்னை மாநிலத்தோடான மாயா பச்வா வழக்காகும் (51 குற்றச் சட்டச் செய்தியிதழ் எல்.ஜே. 1068) இதில் ஏனைய மிகுதியான சான்றுகள் குற்றவாளியை குற்றத்தோடு தொடர்புபடுத்தி காட்டியுள்ளது.

**நோக்கம்**

ஒவ்வொரு கொலையும் ஒரு நோக்கத்தைக் கொண்டதே சில வழக்குகளில் அவை தெளிவாகவும் ஏனையவைகளில் அடைய முடியாததாகவும் அமையும். உளநோயினாலமையும் கொல்லுதலை சாதாரண மனிதர்களால் புரிந்து கொள்ள இயலாது நோக்கம் உறுதியாக்கப்ட்டவுடன் புலனாய்வு அலுவலர் வழக்கை முடிவு செய்யும் நிலையில் இருக்கிறார். வழக்கு நடைபெறும் பொழுது நோக்கத்தை மெய்ப்பிப்பது சட்டப்படி தேவையில்லை யென்றாலும் அது வழக்கு வலுப்படுத்தும், சந்தர்ப்பச் சூழல்களின் சான்றுரைஞர்களால் வழக்குகளில் நோக்கத்தின் சான்று மிகவும் முக்கியமானதாகும்.

**வேறிடத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள்**

புலனாய்வு அலுவலர் பிணம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலேயே கொலை நடந்திருக்க வேண்டியதில்லை என்பதை யனைநல் கொள்ள வேண்டும். இழுத்துவரப்பட்ட தடக்குறி, சக்கரத்தின் அடையாளம் குறிக்கும் உடல் வெட்டுப்பட்டு அதன் பாகங்கள் பல இடங்களிலும் போடப்படுவதுமுடண்டு. உடலின் பாகங்கள் நிகழிடத்திற்கு கொண்டு வரப்பட்ட பொருள்கள் அதாவது பெட்டிகள் சுற்றப்படும் பொருளாகிய துணி, செய்தித்தாள் அல்லது கோணிப் பைகள் போன்றவற்றிற்க்காக கவனமாக பார்த்தல் வேண்டும். அவ்வாறு கிடைத்தால் அவைகள் கவனமாக காக்கப்ட்டு குறிப்பிட்ட தடையங்களுக்காக நன்கு ஆராய்தல் வேண்டும். (பெலாராணி கொலை வழக்கு ஐ.பி.ஜே தொகுதி II எண் 4, டெல்லி டிரங்க் கொலை வழக்கு ஐ.பி.ஜே தொகுதி I எண் 2)

**சான்றுரைஞர்களை விசாரித்தல்**

முதல் தகவல் அறிக்கையில் குறிக்கப்படும் சான்றுரைஞர்கள் எல்லோரையும் மேலும் அமையும் நேர் சான்றுரைஞர்களையும் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் விசாரித்துவிடுதல் நலம் ஏனெனில் காலம் தாழ்த்துதல் ஐயத்தோடு நோக்கப்படாலம். புலனாய்வு அலுவலர்

சான்றுரைஞர்களை மிகவும் பொருமையுடன் ஒருவர்பின் ஒருவராக, மற்றைய சான்றுரைஞர்கள் கேட்கமுடியாதபடி, புறத்தே வைத்து விசாரித்தல் வேண்டும். விசாரிக்கப்படும் சான்றுரைஞர்கள் சான்றுரைஞர்கள தங்களுக்கிடையே பேசி கருத்துக்களை பரிமாரிக்கொள்ளவும் மேலும் விசாரிக்கப்பட்டவர்கள் விசாரிக்கப்பட இருப்பவர்களோடு பேசவும் அனுமதித்தல் கூடாது.